



# *லோன்லி வெக்டர்ஸ்*

*லோன்லி வெக்டர்ஸ்* (*Lonely Vectors*), தஞ்சோங் பகாரில் உள்ள ஒருங்கிணைந்த மையம் (டிஸ்ட்ரிபார்க்) சிங்கப்பூர்க் கலை அரும்பொருளகத்தின் (SAM) புதிய இடத்தின் அடியொற்றி இயங்குகிறது. துறைமுகத்துக்கு அருகே அமைந்திருப்பதால் இந்த இடம் உலகப் பொருளியலையும் அதன் அசைவியக்கங்களையும் பிரதிநிதிப்பதாக உள்ளது. இந்தக் கண்காட்சி, அதைப் பிரதிபலிப்பதோடு, சரக்குகள் மற்றும் பொருள்களின் விநியோகத்திற்கு அப்பால், இயங்கிக்கொண்டே இருக்கும் இந்த உலகினால் தளையிலிருந்து விடுவிக்கப்பட்டு மிதக்கவிடப்பட்டுள்ள மற்ற புவிசார் அமைப்புகளையும் வரலாறுகளையும் பிரதிபலிக்கிறது. சிறப்புப் பொருளியல் மண்டலங்களின் உருவாக்கத்திலிருந்து புலம் பெயரும் போக்குகள் வரை, விதை விநியோகத்திலிருந்து மிகப் பெரிய தோட்டங்களுக்கெதிராக விவசாயிகளின் அரசியல் இயக்கங்கள் வரை, நிலம் மற்றும் தண்ணீரின் சமன்பாடற்ற விநியோகத்திலிருந்து காலப்போக்கில் காணாமல் போன உலகங்கள் வரை, *லோன்லி வெக்டர்ஸ்* நாம் தொடர்புகொள்ளும் வெவ்வேறு வழிகளைக் கண்ணோட்டமிடுகிறது.

# LEVEL 1




## தொழிலாளர் அசைவியக்கங்கள்

1 போ வாங்
*உட்புற அம்சங்களின் ஊற்று*
2022
காங்க்ரீட் தூண், ஒளிர்விளக்குக் குழல்கள், கண்ணாடி அடித்தளம் மற்றும் செடித் தொட்டிகள்: பரிமாணங்கள் மாறுபடக்கூடியவை.

2 P7:1SMA
*லோடிங்/அன்லோடிங்*
2022
கலை நிகழ்ச்சி, வீடியோ கலைப்படைப்பு, எஃகுத் தகடு, உலோகக் கூறுகள்: பரிமாணங்கள் மாறுபடக்கூடியவை.

3 சியன் டெய்ரிட்
(ஹென்றி கஸெரிசின் ஒத்துழைப்புடன்)
*மன்னிப்புக் கோரும் மரம்*
2022
புத்தகங்கள், நில வரைபடங்கள், துணியில் பூத்தையல் மற்றும் மின்னிலக்க அச்சு: பரிமாணங்கள் மாறுபடக்கூடியவை

## வெப்ப வரைபடங்களும் வெப்ப மண்டலங்களும்

1 ஷூ லீ சியாங்
*UKI வைரஸ் எழுச்சி*
2022
மின்னிலக்கக் கலைப் படைப்பு, வீடியோ: HD, ஏழு ஒளிவழிகள், 16:9 வடிவம், வண்ணம் மற்றும் மோனோ, ஸ்டிரியோ, சரவுண்ட், 2 நிமிடம் (சுற்று)

2 ஹோ ருய் ஆன்
*பொருளியல் மக்களில் நுழைகிறது*
2021–2022
விரிவுரை, வீடியோ கலைப்படைப்பு, தாளில் மின்னிலக்க அச்சிடல்கள், மாநாட்டு மேசை, அலுவலக நாற்காலிகள், மேசை, முக்காலி, புத்தகத் தள்ளு வண்டி, புத்தகங்கள், வெப்பக் குடுவை, கோப்பைகள், தட்டுகள், அக்ரிலிக் பெயர்ப் பலகைப் பிடிப்பி: பரிமாணங்கள் மாறுபடக்கூடியவை.

3 டிஃப்பனி சுங்
*குடிப் பெயர்ச்சி வரலாற்றை மறுகட்டமைத்தல்: படகுப் பயணங்கள், முதல் புகலிடத் துறைமுகங்கள், மறுகுடியேற்ற நாடுகள்*
2017
துணியில் பூத்தையல், 140 × 350.5 செ.மீ

## மனித சூழலியல்களுக்கு மேல்

1 ஹோ ஸூ நியனின்
*ஈரப்பதத்திற்கு H-*
2022–
மெய்நிகர் யதார்த்தக் கலைப் படைப்பு, ஆம்பிசானிக் (ambisonic ) ஒலி, 9 நிமிடம்

2 ஜரினா முகம்மட், ஜோயல் டான். ஜாக்கரி சான்
*தஞ்சோங் ரிமாவுக்கான டயோராமாக்கள்*
2022
பல ஒளிவழி வீடியோ கலைப் படைப்பு, புளிக்கவைக்கும் ஜாடி, காற்றுக் கருவிகள், ஆவி வீடுகள், மீட்டெடுக்கப்பட்ட கார், மணல், பாறை: பரிமாணங்கள் மாறுபடக்கூடியவை.

# LEVEL 5

2 தஞ்சோங் ரிமாவுக்கான மேலும் சில டயோராமாக்களை தளம் 5இல் தஞ்சோங் பகார் துறைமுகத்தை நோக்கியுள்ள தாழ்வாரத்தில் காணலாம்"

# ∿ தொழிலாளர் அசைவியக்கங்கள்

பொருள்கள் மற்றும் மூலதனத்தின் உலகளாவிய ஓட்டத்திற்கு வழியமைத்துத் தரும் அதற்கிணையான ஒரு சக்தி தொழிலாளர்கள். குறுகிய காலப் புலம் பெயர் தொழிலாளர்கள் உட்படப் பல தொழிலாளர்கள், வேலை வாய்ப்புகளைத் தேடி இடம் பெயர்கின்றனர். உலகமயமாக்கல். உலகெங்கும் தடையற்ற வர்த்தகம் மற்றும் இடப்பெயர்வின் யுகமாகப் போற்றப்படுகிறது. இது, நடமாட்டம் மிகுந்த மேல் தட்டு மக்களுக்கு நிச்சயம் உண்மை என்றபோதும், இந்தத் தொழிலாளர்களுக்கு அந்த அளவு பொருந்தாது.

காட்சிக் கூடம் 1-க்கு வெளியே அமைந்துள்ள போ வாங்கின் (Bo Wang)*உட்புற அம்சங்களின் ஊற்று* (*Fountain of Interiors*) இந்த ஓவியரின் 2016 ரெசிடென்சியின் (residency) நீட்சியாகும். அதில் இவர் சிங்கப்பூரைச் சுற்றியுள்ள பல பயன்பாட்டு இடங்களின் விளக்கு வெப்ப நிலைளைக் காட்டியிருந்தார். அவர் திரட்டிய மாதிரிகளில், புலம்பெயர் தொழிலாளர் விடுதிகளின் விளக்கு வெப்பநிலைகளே, குறிப்பாக சிங்கப்பூரின் நகர்மையப் பகுதிகளில் காணப்பட்ட இதமான வெளிச்சத்துடன் ஒப்புநோக்க, மிகக் கடுமையானவையாகவும் அதிக ஊதா நிறத்தவையாகவும் இருந்தன. இந்த அவதானிப்புகளின் அடிப்படையில், *உட்புற அம்சங்களின் ஊற்று*, தன் கவனத்தை, கட்டடக்கலை மற்றும் கட்டுமானத்தின் மீது திருப்புகிறது. சிங்கப்பூரின் நகர்ப்புற நில வடிவமைப்புக்குப் புலம்பெயர் தொழிலாளர்கள் இன்றியமையாதவர்கள். *உட்புற அம்சங்களின் ஊற்று*, பல கட்டடங்களின் கட்டுமான எலும்புக்கூட்டை வெளிப்படுத்தி இதைக் காட்டுகிறது. மத்திய காங்க்ரீட் தூணின் வழியே ஒளிவீசும் விளக்குகள் உண்மையான மற்றும் செயற்கையான வெவ்வேறு தாவரங்களால் சூழப்பட்ட ஒரு கண்ணைக் கூச வைக்கும் பிரகாசமான நீர்வீழ்ச்சியை உருவாக்குகின்றன. மற்ற பல கட்டடக்கலை அடையாளச் சின்னங்களைப் போன்றே போ வாங்கின் படைப்பும் இயற்கைக்கும் செயற்கைக்கும் இடையே ஊசலாடுகிறது. இந்தப் படைப்பு, புலம்பெயர் தொழிலாளர்களின் சிரமமான வேலை நிலைமைகளை அடிக்கோடிட்டுக் காட்டுவதோடு, தங்களுடைய பெரும் முயற்சியிலும் உழைப்பிலும் கட்டப்பட்ட ஒரு நகரத்தின் கண்ணைக் கூசவைக்கும் விளக்கொளியில் வாழ நேரும் மோசமான நிலைமையையும் காட்டுகிறது.

P7:1SMAயின்- *லோடிங்/அன்லோடிங்* (*Loading/Unloading*), நவீனச் சிற்பம் மற்றும் பல்வேறு பௌதிகக் குறுக்கீடுகளின் மூலம் இந்தக் கண்காட்சி தஞ்சோங் பகார் துறைமுகத்திற்கு அருகே அமைந்திருப்பதைக் காட்டுகிறது. பிரதானமான கட்டமைப்பு பல கூறுகளைக் கொண்டமைந்தது. இது கண்காட்சி முழுவதும் P7:1SMA-யின் துணைவர்களால் நிகழ்த்தப்படும் பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் செயற்பாடுகளின் வழி பிரிக்கப்பட்டு மீண்டும் ஒன்றிணைக்கப்படும். இந்த நிகழ்ச்சிகளின்போது, இந்தத் துணைவர்கள் கட்டமைப்பின் கூறுகளை நகர்த்தும்போது கட்டமைப்பு படிப்படியாகத் தரை மட்டமாகிவிடும். அதனையடுத்து பார்வையாளர்கள் அவர்களின் ஒத்திகைகளையும் செயற்பாடுகளையும் ஆவணப்படுத்தும் திரைப்படம் ஒன்றைக் காண்பார்கள். இந்தக் கலைஞர்கள், தஞ்சோங் பகார் துறைமுகத் தொழிலாளர்களிடம் விரிவாக உரையாடி, தங்கள் நடன அமைப்பில் நிகழ் நேர அவதானிப்புகளையும் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். *லோடிங்/அன்லோடிங்*, கப்பல் துறைமுகங்கள் போன்ற மனிதனால் கட்டப்பட்ட பிரமாண்டமான கட்டமைப்புகள் அதீத செயற்திறன் மிக்கவை எனக் கூறப்படுவதைக் கேள்விக்குள்ளாக்குகிறது. இந்த அமைப்புகளைக் கட்ட உதவிய தொழிலாளர்கள் எப்படிக் கண்ணுக்குத் தெரியாதவர்களாக்கப்பட்டுவிட்டனர் என்பதை இது நமக்கு வலியுறுத்துகிறது.

*மன்னிப்புக் கோரும் மரம்* (*Penitent Plant*), பிலிப்பின்ஸ் உலகின் மூன்றாவது பெரிய வாழைப்பழ ஏற்றுமதியாளர் என்பதை மையமாகக் கொண்டது. கெவண்டிஷ் வகை வாழைப்பழ உற்பத்தியையும் பயனீட்டையும் ஆராய்ந்த சியன் டெய்ரிட் (Cian Dayrit), இந்த வெப்ப மண்டலப் பழத்திற்கான உலகளாவிய தேவை மற்றும் விநியோகச் சங்கிலியைத் தோலுரித்துக் காட்டுகிறார். இந்த வாழைப்பழ உற்பத்தி மற்றும்

பயனீட்டுக்கு வழி செய்யும் தற்போதையக் கட்டமைப்புகளை ஆராய்வதற்குப் பதிலாக, டெய்ரிட் நம் கவனத்தைத் தொழிலாளர்களின் அனுபவங்கள் மற்றும் அவர்களுடைய கதைகளின் மீது திருப்புகிறார். மையத் துணியில் வாழை மரம் ஒன்று உள்ளது. அதைச் சுற்றிலும் வாழையைப் பயிரிடும் மற்றும் ஏற்றுமதி செய்வதில் ஆதிக்கம் செலுத்தும் அமைப்புகளையும் தொழில் நிறுவனங்களையும் குறிக்கும் அம்சங்கள் உள்ளன. அது மிண்டானோவில் உள்ள வாழைத் தோட்டங்களின் கூட்டு பிம்பத்தின் மேல் அமைந்துள்ளது. இந்தப் படைப்புடன், அதைப் படைப்பதில் ஓவியருக்கு உதவிய பல்வேறு ஓவியங்களும் பனுவல்களும் உள்ளன.

ஒரு தொகுப்பாகப் பார்வையிடும்போது, இந்த மூன்று படைப்புகளும் உலகப் பொருளியலையும் அதன் உற்பத்தி மற்றும் பயனீட்டுப் போக்குகளையும் மறுபரிசீலனை செய்யத் தூண்டுகின்றன. உலகப் பொருளியலை, குறிப்பாக தஞ்சோங் பகார் ஒருங்கிணைந்த மையம் (டிஸ்ட்ரிபார்க்) போன்ற ஓர் இடவெளியைப் பார்க்கும்போது, சுமுகமாக இயங்கும் ஓர் எந்திரமாகக் கருதுவது எளிது. எனினும், ஒட்டுமொத்த உலகப் பொருளியலின் கட்டமைப்பும் தங்கள் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களுக்காக உலகெங்கும் நகர்த்தப்படும், ஆனால் உலகை இயக்குவதில் செல்வாக்கற்ற தொழிலாளர்களை நம்பியிருக்கிறது.

## வெப்ப வரைபடங்களும் வெப்ப மண்டலங்களும்

இடவெளிகளைப் பற்றிய நம் புரிதலுக்குப் பல சமயங்களில் நில வரைபடங்களே துணைபுரிகின்றன. இம்மண்ணுலகின் மேற்பரப்பைக் காட்டும் நில உருவப்படங்கள் நிலப்பரப்பை அளவிட்டு ஆவணப்படுத்துகின்றன. இந்த நிலப்படங்கள் நடுநிலையானவை என்று கூறப்படுகிறது. ஆனால் கலைஞர்கள் இந்தப் புவியில் இருக்கக்கூடிய பல்லுயிர்களை முழுமையாகப் பதிவு செய்யும் வகையில் நிலப்படங்களை உருவாக்குவதற்கான சாத்தியங்களை ஆராயும் அதே வேளையில் இந்த அனுமானத்தைக் கேள்விக்குள்ளாக்குகிறார்கள்.

நிலவரைபடவியல், பல சமயங்களில் வளங்களை எடுப்பதற்கான அல்லது அதைத் தடை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டு வன்முறை மற்றும் ஒடுக்குதலுக்கான ஒரு கருவியாக விளங்கக் கூடும். *மன்னிப்புக் கோரும் மரம்* (*Penitent Plant*) என்ற படைப்பில் சியன் டெய்ரிட், நிலவரைபடம் தயாரிப்பதைக் கண்டனம் செய்கிறார், அதன் அதிகாரத்திற்குச் சவால் விடுக்கிறார். இந்தப் படைப்பில் உள்ள கையால் வரையப்பட்ட நிலப்படங்கள், நிலப்படத்திற்கு எதிரான பட்டறைகளின் விளைவாகும். வேடிக்கையான தனி நபர் கருத்துடன் நிலவரைபடவியலுக்கு அறிவியல் தன்மையையும் வழங்குகிறது. ஒவ்வொரு நிலப்படமும், மாறுபட்டது. தொழிலாளர்களின் வழக்கமான அன்றாட நடவடிக்கைகளை வெளிப்படுத்துவது. இந்த ஆவணங்களை இப்படைப்பில் உள்ளிட்டிருப்பதன் மூலம், தரவுகளைத் திரட்டுவதில் உள்ள குறைபாடுகளைப் பரிசீலிக்கப் பார்வையாளர்களைத் தூண்டுகிறார். விளிம்புநிலைக் கதைகளுக்கு அவற்றின் கருப்பொருளின் அடிப்படையில் ஆதரவளிக்க நம்மை வற்புறுத்துகிறார்.

இதேபோல், வரைவதற்கும் அளவிடுவதற்கும் இடம் குறிப்பதற்குமான தேவை டிஃபனி சுங்கின் (Tiffany Chung) கலைப் பணியிலும் துணை புரிந்துள்ளது. *குடிப் பெயர்ச்சி வரலாற்றை மறுகட்டமைத்தல்: படகுப் பயணங்கள், முதல் புகலிடத் துறைமுகங்கள், மறுகுடியேற்ற நாடுகள்* (*Reconstructing an exodus history: boat trajectories, ports of first asylum and resettlement countries*), எனப்படும் குடிப் பெயர்ச்சி, படகுப் பயணங்கள், முதல் புகலிடம் மற்றும் மறுகுடியேற்றம் சார்ந்த படைப்பில் சுங், 1979க்கும் 1989க்கும்

இடையிலான அகதிகளின் நடமாட்டத்தை பூத்தையல் வேலைப்பாட்டு வரைபடம் ஒன்றில் விவரிக்கிறார். வழக்கமாக நிலவரைபடங்களில் முற்றிலும் விடுபட்டுப் போயிருக்கும் இந்த அகதிகள், சுங்கின் படைப்பில் முக்கியத்துவம் பெறுகிறார்கள். அடர்த்தியிலும் இடைவெளியிலும் வேறுபடும் தையல்களின் மூலம், சுங், நில வரைபடங்களிலும் வரைபடங்களிலும் உள்ள குறைபாடுகளையும் அகதிகளின் சொந்த வரலாறுகள் விடுபட்டிருப்பதையும் மறைமுகமாகக் குறிப்பிடுகிறார். இந்தப் படைப்பு, கல்வி சார்ந்த ஆராய்ச்சியும் ஆண்டுக்கணக்கான உறவுகள் மற்றும் செயற்பாடும் இணைந்த, சுங்கின் நீண்ட காலத் திட்டமான *வியட்நாம் குடிப்பெயர்ச்சித் திட்டத்தின்* (*The Vietnam Exodus Project*), ஒரு பகுதியாகும். இன்று நம் நன்கு இணைக்கப்பட்ட உலகில் நடமாட்டம் அதிகரித்திருப்பது இயல்பான போக்கு என்றாலும், தென்கிழக்காசியப் புலப் பெயர்வை, அது தன்னிச்சையானதாக அல்லது வலுக்கட்டாயமானதாக இருந்தாலும், ஒரு பன்முக நிகழ்வாகக் கருதுமாறு நம்மைக் கேட்டுக்கொள்கிறார்.

ஹோ ருய் ஆனின் (Ho Rui An) தொடரும் ஆராய்ச்சி, 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து கிழக்கு மற்றும் தென்கிழக்காசியாவின் அரசியல், பொருளியல் போக்குகளில் கவனம் செலுத்துகிறது. *பொருளியல் மக்களில் நுழைகிறது* (*The Economy Enters the People*), என்னும் அவருடைய புதிய படைப்பில், அவர் சீனாவின் பொருளியல் மாற்றத்தில் சிங்கப்பூரின் பங்கு குறித்துச் சிந்திக்கிறார். 1970களில் மேற்கொள்ளப்பட்ட அதன் சீர்திருத்தங்களுக்குப் பிந்திய சீனச் சந்தையின் எழுச்சி ஏற்பட்டிராவிட்டால், இன்றைய உலகப் பொருளியியல் நிலை சாத்தியமாகியிராது. பொருளியலைத் தங்கள் அரசாங்கத்தின் அடிப்படை நோக்கமாகக் கருதுவதில் தங்கள் சிங்கப்பூர்ச் சகாக்களைப் பின்பற்றிய ஒரு தலைமுறைச் சீனத் தலைமைத்துவத்தை ஹோ கவனத்தில் கொள்கிறார். இந்தப் படைப்பு, ஒரு சொற்பொழிவு நிகழ்ச்சி மற்றும் சீன, சிங்கப்பூர்ப் பிரதிநிதிகளுக்கிடையிலான பல கூட்டங்களையும் சந்திப்புகளையும் குறிப்பிடும் ஓர் அமைப்பின் வடிவம் கொண்டுள்ளது. இந்தப் படைப்பின் மையத்தில் பொருளியல் என்பது என்ன, நாம் எப்படி அதைக் கண்காணித்து ஆட்சி செய்வது என்ற கேள்வி உள்ளது.

ஷூ லீ சியாங்கின் (Shu Lea Cheang) *UKI* வைரஸ் எழுச்சி (*UKI VIRUS SURGING*) இந்தக் கலைஞரின் படைப்புத் தொடரான *UKI* (2009–)-யின் புதிய வெளியீடு. *UKI* (2009–)-முந்திய திரைப்படமான *I.K.U.* (2000)-யின் தொடர்ச்சியாக உருவானது. உயிரியல்,  சமூகவியல் ஆகிய இரண்டின் அடிப்படையிலான இனப்பெருக்கம் சியாங்கின் படைப்புகள் பலவற்றின் மையமாக உள்ளது. .அவர், பாலினம், பரிணாம வளர்ச்சிக்கான உடலின் உயிர்ம ஆற்றலையும் அதன் நீட்சியாக சமுதாயப் பங்குகள், இயக்கங்கள் ஆகியவற்றை மறுவரையறை செய்யும் வகையில் முற்றிலும் வேறொன்றாக மாறுவதற்கான சமுதாயத்தின் ஆற்றலையும் ஆராய்கிறார். சியாங்கின் படைப்பில் அறிவியல் புனைவுப் பின்னணியின் பெரும் பகுதி அண்மையப் பொருளியல் நெருக்கடிகளில் (முதலாவது 2000–2002, பின்னர் 2007–2008) அவரின் ஈடுபாடுகளினால் தூண்டப்பட்டது. இவற்றின் வழியாக அவர் மற்றவர்களுடன் மீண்டும் தொடர்புகொள்ளும் வெவ்வேறு வழிகளை மீண்டும் கற்பனை செய்கிறார்.

இந்தப் படைப்புகள், உலகப் பொளியலை மறு வரையறை செய்வதற்கான மாற்று வழிகளை வழங்கி, இந்த ஓட்டங்களைச் செயற்படுத்தும், மறு உருவாக்கம் செய்யும் மனிதர்களுக்கும் அமைப்புகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கின்றன. இவற்றின் மீதும் பரிணாம வளர்ச்சிக்கான உயிர்ம ஆற்றல்களின் மீதும் கவனம் செலுத்துவதன் வழி இவை மற்றொரு உலகம் சாத்தியம் என நமக்கு நினைவுபடுத்துகின்றன.

# மனித சூழலியல்களுக்கு மேல்

மனிதர்களாகிய நாம் இயற்கைச் சுற்றுச் சூழலில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு யுகத்தில் வாழ்கிறோம் என்றும் நம்முடைய செயல்கள் இந்தப் புவியமைப்பியலின் மேற்பரப்பை மாற்றுவதால் புவியியல் சக்தியுடன் ஒப்பிடக்கூடிய அளவுக்கு நாம் செயற்படுவதாகவும் இப்போதெல்லாம் அடிக்கடி கூறப்படுகிறது. மனித ஆக்கப் புவியியல் சக்திகளின் பெரும் பகுதி உலகப் பொருளியலின் அம்சங்களையும் இந்த அம்சங்கள் எப்படிக் காலப்போக்கில் புவியின் மேற்பரப்பைச் சேதப்படுத்தி மறு வடிவமைத்திருக்கின்றன என்பதையும் சார்ந்திருக்கிறது. நம் எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டுமெனில், இந்த கிரகத்தின் உலகளாவிய மேற்பார்வைப் பொறுப்பு வழக்கமான கட்டுப்பாட்டு அறைகளிலிருந்து மேற்கொள்ளப்பட முடியாது. அதற்கு காலப் போக்கில் நாம் இழந்துள்ள மற்ற உலகங்களுடன் தொடர்புகொள்ள வேண்டும்.

ஷூ லீ சியாங்கின் (Shu Lea Cheang) UKI தொடர் (2009–), நாம் வேறொன்றாக மாறக்கூடிய நம் உயிர்ம ஆற்றலைப் பரிசீலிக்கும் வேளையில் இவ்வகைச் சிந்தனையில் ஈடுபடுவதற்கு ஒரு நல்ல தொடக்கப் புள்ளியாக இருக்கும். இந்தப் படைப்பு, 2000ஆம்களின் பொருளியல் நெருக்கடிகள் பற்றிய ஒரு விமர்சனமாக விளங்கக்கூடிய ஓர் அறிவியல் புனைவு. இது முற்றிலும் வேறுபட்ட ஒரு சமுதாய அமைப்பை மறுபரிசீலனை செய்ய நம்மைத் தூண்டுகிறது. சியாங்கின் *UKI* பிரபஞ்சத்தில் நாம் “வழக்கமானதாக” அல்லது “மனிதன் சார்ந்ததாகக்” கருதும் அனைத்தும் எப்போதும் வினோதமாகத் தோன்றுகிறது. மனித குலம் பற்றிய ஒற்றைப் புரிதலுக்கு மாறாக, சியாங்கின் படைப்பு, நாம் பலவற்றை உள்ளடக்கியவர்கள், நாம் எப்போதும் மனிதனுக்கும் மேலே என்று முன்மொழிகிறது.

ஹோ ஸூ நியனின் (Ho Tzu Nyen) *ஈரப்பதத்திற்குH* (*H for Humidity*) என்னும் படைப்பு, தென்கிழக்காசியாவை நீர் மற்றும் காற்றின் உலகங்களாக மறு கட்டமைக்கவும் மறு கற்பனை செய்யவும் முற்படுகிறது. இந்த வட்டாரம் மழைப் பொழிவும் ஈரப்பதமும் மிக்க ஒன்று என்பதையும் படைப்பு பற்றிய புராணங்கள் எப்படி கடலைக் கடைவதிலிருந்து தொடங்குகின்றன என்பதையும் இது பயன்படுத்திக் கொண்டுள்ளது. அதோடு, இந்த வட்டாரத்தின், குறிப்பாக சிங்கப்பூரின் நீர் மேலாண்மை மற்றும் பொதுப் பணித் துறை பற்றிய காலனித்துவ வரலாறு, பருவநிலை மாற்ற யுகத்தில் ஈரப்பதத்திற்கு எதிரான நம் குளிர்பதனப் போராட்டம் ஆகியவற்றையும் இது பயன்படுத்திக் கொண்டுள்ளது. நம் கடல் மட்டங்கள் உயரும் ஒரு காலத்தில், “நீரைப் போல இருப்பது” நமக்கு எப்படி இருக்கும்?

சிங்கப்பூரின் தென் கடலோரத்தை ஒட்டிப் பல சிறிய தீவுகள் உள்ளன. இவற்றுள் செந்தோசா என புதுப் பெயரிடப்பட்ட, புதுத் தோற்றம் பெற்ற பூலாவ் பிளாக்காங் மத்தியும் ஒன்று. இன்று செந்தோசா ஒரு நகர்ப்புறச் சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. எனினும், கடல் சார்ந்த உயிரினங்கள் செழித்து வளரக்கூடிய ஒரு பாதுகாக்கப்பட்ட கடலோர நிலப்பரப்பான தஞ்சோங் ரிமாவும் இங்கு தான் உள்ளது. *தஞ்சோங் ரிமாவுக்கான டயோராமாக்கள் (Dioramas for Tanjong Rimau)* என்னும் தங்கள் படைப்பில் ஜரினா முகம்மட் (Zarina Muhammad), ஜோயல் டான் (Joel Tan). ஜாக்கரி சான் (Zachary Chan) ஆகியோர், மறு மேம்பாட்டிற்குத் திட்டமிடப்பட்டிருக்கும் இந்தத் தளத்தையும் சிங்கப்பூரின் தென் நீர்முகப்பையும் குறிப்பிடுகின்றனர். இந்தப் படைப்பில் பார்வையாளர்களை இந்த நவீன சிற்பத்தின் ஒலிப்பரப்புக்கு ஈர்க்கும், குமிழிகளையும் முணுமுணுப்புகளையும் வெளியிடும் கலங்கள் உள்ளன. நிலத்தையும் அதன் வரலாற்றையும் நோக்கும் இந்தப் படைப்பு, பண்டையப் பிரபஞ்சவியல்களையும் ஆவிகளின் பாதைகளையும் நினைவுகூ ர்வதற்கான ஒரு வழிமுறையாகப் `பயன்படுத்துகிறது. இங்கு, “பிரபஞ்சவியல்கள்” என்பது, இந்த உலகின் படைப்பு மற்றும் அமைப்புப் பற்றிய, ஒரு சமூகத்தின் பொதுவான புரிதலைக் குறிக்கிறது. இன்றைய நகர்ப்புறச் சுற்றுப்புறத்தின் வானளாவிய விலையுயர்ந்த கட்டடங்களுக்கிடையே இந்த இடங்கள் அடையாளம் தெரியாத

வகையில் மறுமேம்பாட்டுக்கு உட்பட்டிருந்தபோதும், பல தலைமுறைகளாக மறக்கப்பட்ட, இந்த நிலத்தின் கடந்த கால வாழ்க்கைகள், கண்ணுக்குப் புலப்படும் வகையிலேயே ஒளிந்திருக்கின்றன.

தஞ்சோங் பகார் ஒருங்கிணைந்த மையத்தின் (டிஸ்ட்ரிபார்க்கின்) பரபரப்பான பின்னணியில், இந்த மூன்று படைப்புகளும், வர்த்தகம் வழக்கம் போல் தொடர்ந்து இயங்கியும் நாம் தொடர்ந்து நம்மைச் சுற்றியுள்ள உலகைப் பயன்படுத்தியும் வந்தோம் என்றால் நாம் எதை இழக்கக்கூடும் என்று யோசித்துப் பார்க்கத் தூண்டுகின்றன. ஒரு நெருக்கடிக்குப் பின் அல்லது ஓர் உயிரினமாக நாம் அழியக்கூடிய நிலைக்குப் பின், உயரும் கடல் மட்டங்களுக்கெதிராக நாம் நமக்காகக் கட்டிக்கொண்டுள்ள கோட்டை போதுமானதாக இல்லாவிட்டால் என்ன நடக்கும்? நாம் நீண்ட காலத்துக்கு முன் இழந்துவிட்டதாகக் கருதிய மற்ற உலகங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய நேரம் வந்திருக்கக் கூடும்.

# பொதுநூலகங்கள் மற்றும் விளம்பரப் பலகைகள் பற்றிய தகவல்

*லோன்லி வெக்டர்ஸ்* (*Lonely Vectors*), உள்ளூர் நூலகங்கள், பொது விளம்பரப் பலகைகள் உட்படப் பல்வேறு இடங்களில் நடத்தப்படும் ஒரு கண்காட்சி. எங்களுடைய மற்ற இடங்கள் பற்றிய தகவல்களைக் கீழே காணலாம்:

## *பச்சை நண்டு: மங்கலமான இட அமைப்பின் வரைபடம் (The Green Crab: A Diagram of Auspicious Spatial Organization)*

ஜெங் மாலர் (Zheng Mahler)

19 பிப்ரவரி – 28 ஆகஸ்ட் 2022. ப்ராஸ் பசா மற்றும் 8 குவீன் ஸ்ட்ரீட்டில் இருக்கும் SAM கட்டடத்தைச் சுற்றியுள்ள விளம்பரப் பலகை

*பச்சை நண்டு: மங்கலமான இட அமைப்பின் வரைபடம்* (*The Green Crab:: A Diagram of Auspicious Spatial Organization*), சிங்கப்பூரின் கண்ணைக்கவரும் ஒரு ஃபெங் ஷுய் நில வரைபடம். இது நகரைச் சுற்றிவருவதற்கான ஒரு மாற்று வழிகாட்டியை வழங்குகிறது. கலை இரட்டையர்களான ஜெங் மாலரால் சிங்கப்பூரின் கட்டடக்கலை வரலாற்றாசிரியரான இயன் டான் மற்றும் ஒன் பைட் டிசைன் ஸ்டுடியோவின் துணையுடன் உருவாக்கப்பட்டுள்ள இந்தப் படைப்பு, சிங்கப்பூர் உண்மையற்றது, செயற்கையாகக் கட்டப்பட்ட சுற்றுப்புறம் என்ற விமர்சனத்தை நிராகரிக்கிறது. இந்த நகர நாட்டின் பயன்பாடு சார்ந்த நவீனத்துவத்திற்கு அப்பால் பார்ப்பதன் வழி இந்தப் படைப்பு, நகர்ப்புற மேம்பாட்டுக்கான சிங்கப்பூரின் பெருந்திட்டத்துடன் ஸி சக்தியின் (*qi*) ஓட்டம் கண்ணுக்குப் புலனாகாத வகையில் பின்னிப் பிணைந்திருப்பதை வெளிப்படுத்துகிறது. இந்தப் படைப்பு ஃபெங் ஷுய்யின் அடிப்படை அம்சங்களைக் கவனத்தில் கொள்ளும் அதே வேளையில், நாம், பிரபஞ்சவியலும் பொறியியலும் ஒன்றாக இருக்கக் கூடிய நம் சுற்றுப்புறத்திற்கு அனைத்தையும் உள்ளடக்கிய ஓர் அணுகுமுறையைக் காண வேண்டும்.

## *விதைக்கும் உரிமை (Seeding Sovereignty)*

சு ஹாவ் பெய் (Chu Hao Pei)

1 – 31 மார்ச் 2022, பிடோக் பொது நூலகம்
2 ஏப்ரல் – 6 ஜூன் 2022, அங் மோ கியோ பொது நூலகம்
8 ஜூன் – 24 ஜூலை 2022, ஜூரோங் வட்டார நூலகம்
27 ஜூலை - 11 செப் 2022, தம்பினிஸ் வட்டார நூலகம்

*விதைக்கும் உரிமை* (*Seeding Sovereignty*) விதை விநியோகத்திற்கு ஒரு மாற்றை வழங்க கலைஞர் சூ ஹாவ் பெய் (Chu Hao Pei) மேற்கொண்டுள்ள ஒரு முயற்சி. இந்தப் படைப்பு விதை நூலகம் ஒன்றின் வடிவத்தில் உள்ளது. இது நம் பகிர்ந்துகொள்ளப்படும் அறிவை அடிப்படையாகக் கொண்டும் நாம் ஒருவரை ஒருவர் சார்ந்திருப்பதை உறுதி செய்தும் நம்மைக் கட்டமைத்துக் கொள்வதற்கான வெவ்வேறு வழிகளைப் பற்றி யோசிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. இது இந்தக் கலைஞர் அரிசியிலும் சிங்கப்பூரிலும் தென்கிழக்காசியாவிலுமான அதன் விநியோகத்திலும் கொண்டிருக்கும் நீண்ட கால ஆர்வத்தின் விளைவாக எழுந்த ஒன்று. சகாக்களிடையே விதை மறு விநியோகத்திற்கான ஒரு மாற்றுப் பொருளியல் என்ற முறையில் இந்தப் படைப்பு, மேலும் வெளிப்படையான, முறைசாரா உறவுகளுக்கேற்ப அவ்வப்போது நிகழும் ஒரு வேறுபட்ட தொழிலாளர் அசைவியக்கத்தைக் காட்சிப்படுத்துகிறது.